# சங்கரன்கோவில் நகராட்சி

**2021-ம் ஆண்டு மே மாதம் 31.05.2021ம் தேதி பிற்பகல் 5.00 மணிக்கு சாதாரணக்கூட்டம்**

பொருள் எண் : 1152

சங்கரன்கோவில் நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2021, ஏப்ரல் 2021 மற்றும் மே 2021 மாதங்களுக்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் – 1153

சங்கரன்கோவில் நகராட்சியில் திரு.ஜெகநாதன் என்பவர் உதவியாளராக பணிபுரிந்து வருகையில் பணியிடை காரணமாக 24.06.2004ந் தேதியில் காலமாகிவிட்டார். அன்னாரின் மனைவி திருமதி.செண்பகவள்ளி என்பவருக்கு கொடு ஆணை எண்.3866–ன்படி குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டு, காலஞ்சென்ற உதவியாளர் திரு.மு.ஜெகநாதன், என்பவர் வீடுகட்டும் முன்பணம் கடனுக்கான வட்டி கணக்கீட்டு வகைக்காக ரூ.50000/– அன்னாரின் இறப்பு மற்றும் ஓய்வுகால பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்து இவ்வலுவலகத்திற்கு இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20502/நஒச3/2006 நாள்.26.04.2006 கடிதத்தின்மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அன்னார் வீடுகட்டும் கடன் வகைக்கு அசல் முழுவதும் செலுத்திள்ளதாலும், பணியாளர் காலமாகிவிட்டபடியால் கடனுக்குரிய வட்டித்தொகை முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.3738/2004/சி1 நாள்.16.12.2008ன்படி அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி இறப்பு மற்றும் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட ரூ.50000/– தொகையானது காலஞ்சென்ற பணியாளர் திரு.மு.ஜெகநாதன் என்பவரின் வாரிசுதாரர் மனைவி திருமதி.மு.செண்பகவள்ளி என்பவருக்கு வழங்கப்படவேண்டிய தொகையாகும் என்பதால் அன்னாரின் விண்ணப்பத்தின்படி ரூ.50000/– தொகையினை திருமதி.மு.செண்பகவள்ளி என்பவருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் – 1154

சங்கரன்கோவில் நகராட்சியில் வார்டு எண்.26 சங்கர்நகர் நகர் 2ம் தெருவில் உள்ள கதவு எண்.10 கட்டிடத்திற்கு சொத்துவரி பெயர்மாற்றம் செய்யப்பட்டது தொடர்பாக திருமதி.முத்துலெட்சுமி என்பவரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் 1.மாவட்டஆட்சித்தலைவர், 2.நகராட்சி ஆணையாளர் மற்றும் இருவர் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண்.**WP(MD)No.10206/2012** ன்படி தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்கண்ட வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிமன்ற வழக்கறிஞர் திரு.என்.திலிப்குமார் அவர்களின் 24.04.2021ந் தேதிய கடிதத்தில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.9000/– வழங்கிடக்கோரி தெரிவித்துள்ளார். எனவே மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9000/– வழங்கிட மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (கோப்பு 1862/2012/சி1)

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் – 1155

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **8,9,10,12,13,14,15,17,24,25,26** ஆகிய பகுதி வார்டுகளிலும் முதல் மற்றும் இரண்டாம் நிலை துப்புரவு பணியானது ஏ.வி.எம். சர்வீஸ் பாயிண்ட் நிறுவனம் - இராஜபாளையம் நிறுவனம் மூலம் பணி செய்ய இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.**1967/2017/எச்1** நாள்.**30.06.2020**ன்படி **01.07.2020** முதல் **30.06.2021** முடிய ஓராண்டு காலத்திற்கு பணிநீட்டிப்பு வழங்கப்பட்டு அதனடிப்படையில் பணிசெய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணிக்காலம் **30.06.2021** உடன் முடிவடைவகிறது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி பணிக்கால மூன்று ஆண்டு முடிந்த உடன் புதிய நிறுவனம் தேர்ந்தெடுத்து பணிசெய்ய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற பிரேரணை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டபடுகிறது. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி பெற்று புதிய நிறுவனம் தேர்ந்தெடுக்கும் வரை, பொதுசுகாதாரம் அவசியம் கருதி தற்போது பணி செய்து வரும் இராஜபாளையம் ஏ.வி.எம். தனியார் நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே செலவின மதிப்பீட்டில் **01.07.2021** முதல் மறு உத்தரவு வழங்கும் வரை பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.**1967/2017/எச்1**)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1156

சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று பரவி வருவதாலும், தினசரி பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படியும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.9691/2021/ஜே2 நாள்.11.05.2021ன்படி பேரிடர் மேலாண்மை சட்டம் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியத்தின்கீழ் பொதுசுகாதார பணியாளர்களுக்கு தினசரி பணிகளுக்குத் தேவையான பாதுகாப்பு உபரகரணங்கள், கிருமிநாசினிகள், வாகனங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கி வழங்கிடவும் அதற்கான செலவினத்தொகை ரூ.30.00 இலட்சம் தொகை அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நகராட்சிப்பகுதியில் தற்போது கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டு தடை ஏற்படுத்தப்பட்டுள்ள பகுதிகள் 6 எண்ணம் உள்ளது. மேலும் நோய்தொற்று அதிகரித்து வருகிறது எனவும், தொற்றுபாதிக்கப்பட்ட பகுதிகளிலும் அனைத்து வார்டு பகுதி பொதுமக்களுக்கும் சுழற்சி முறையில் கபசுரகுடிநீர் மற்றும் நிலவேம்பு கசாயம் போன்றவை பொதுமக்களுக்கு காய்ச்சி வழங்கவேண்டியுள்ளதாலும், இந்நகராட்சிக்கு பொதுசுகாதாரப்பணிகளுக்கும், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கும் பாதுகாப்பு உபரகரணங்கள், கிருமிநாசினிகள், வாகனங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கி வழங்கிடக்கோரி துப்புரவு ஆய்வாளர் தனது 13.05.2021ந் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். பேரிடர் மேலாண்மை சட்டம் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியத்தின்கீழ் பொதுசுகாதார பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் லைசால், சானிடைசர், பிளீச்சிங் பவுடர், மாஸ்க் போன்ற கிருமிநாசினி பொருட்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவை ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மூலம் வாங்கிடவும், நிலவேம்பு குடிநீர்பொடி, கபசுரகுடிநீர்பொடி போன்றவை அரசு நிறுவனமான TAMPCOL நிறுவனத்தின் மூலம் வாங்கவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (கோப்பு எண்.566/2021/எச்1

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1157

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பேருந்துநிலையம் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வாளகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தின் AC சீட் கூரை பழுதடைந்துள்ளது. மேலும் சமையலறை மற்றும் குழந்தைகள் சிறுநீர் கழிக்கும் பகுதியன் மேற்கூரை இல்லாமால் மிகவும் மேசாமாக உள்ளது. மேலும் மேற்படி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ரூ.1.25 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள கல்வி நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1158

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட லெட்சுமியாபுரம் கீழ 7ம் தெருவில் (வடக்குபகுதி) மழைநீர் வடிகால் வசதி இல்லை. எனவே இப்பகுதி மக்கள் நகராட்சிக்கு கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். இப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை வீட்டின் முன்புறம் சேகரித்து வருகின்றனர். பொதுசுகாதார நலன் கருதி இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ.8.15 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1159

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட சுகாதாரபணியாளர் குடியிருப்பில் தூய்மை பணியாளர்கள் குடியிருந்து வருகின்றனர். இந்த கட்டிடத்தில் கழிவறை பகுதியின் பின் பகுதியில் உள்ள சுவற்றில் உள்ள பூச்சுமானம் மிகவும் சிதிலமடைந்து உள்ளதால் உடனடியாக அதனைசரி செய்து கழிவறையில் உள்ள குழாய்கள் கோப்பைகள் ஆகியவற்றை மாற்றி கழிவறை சுவற்றின் வெளிப்புறத்தில் பூச்சுமானம் சிதிலமடைந்து உள்ள பகுதியில் Glazed Tiles ஒட்ட வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ரூ9.90 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்க்கு மன்ற அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1160

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்டலெட்சுமியாபுரம் கீழ 7ம் தெருவில் (தென் பகுதி) மழைநீர் வடிகால் வசதி இல்லை. எனவே இப்பகுதி மக்கள் நகராட்சிக்கு கோரிக்கை மனு கொடுத்துள்ளார்கள். இப்பகுதியில் உள்ள வீடுகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரை வீட்டின் முன்புறம் சேகரித்து வருகின்றனர். பொதுசுகாதார நலன் கருதி இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான மழைநீர் வடிகால் அமைப்பது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி பணி மேற்கொள்ள மதிப்பீடு தொகை ரூ8.25 லட்சத்திற்க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்டபணியினைமேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1161

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட இந்திராநகர் நகராட்சி துவக்க பள்ளிக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு சுமார் 36 அண்டுகள் ஆகிறது. மேற்கண்ட கட்டிடத்தில் மேற்கூரை RCC தளம் மிகவும் சேதமடைந்து கம்பிகள் துருப்பிடித்துள்ளதால் பள்ளிக் கட்டிடம் குழந்தைகளின் நலனை கருத்திற் கொண்டு உடனடியாக இந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துவது மிகவும் அவசியமாகிறது. எனவே மேற்படி கட்டிடத்தினை இடிக்க வேண்டியுள்ளதால் ரூ2.48 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1162

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பாட்டத்தூர் கிராமத்தில் உள்ள பொது மயானத்தில் எரிமேடை அமைக்கப்பட உள்ளது. இந்த பொது மயானத்தில் பொதுமக்களின் தேவையாக தண்ணீர் வசதி ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதற்காக ஊரின் மையப்பகுதியில் உள்ள கிணற்றில் உள்ள நீரை பயன்படுத்தி தண்ணீர் வசதி எற்படுத்தலாம். மேலும் இந்த கிணற்று நீரை அருகிலுள்ள மோட்டார் அறையின் மேலுள்ள நீர்தேக்க தொட்டியிலிருந்து விநியோகம் செய்வதற்கு இந்த தொட்டி மிகவும் பராமரிப்பில்லாமல் கசிவு ஏற்பட்டு தண்ணீர் வீணாகிறது. எனவே இந்தநீர் சேகரிக்கும் தொட்டியையும் பராமரிப்பு செய்து இந்த கிணற்று நீரை பொதுமயானத்திற்கு கொண்டு செல்லப்படவேண்டும். எனவே மேற்படி பணியினை வேண்டியுள்ளதால் ரூ.3.40 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள குடிநீர் நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1163

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பாட்டத்தூர் கிராமத்தில் உள்ள பொது மயானத்தில் எரிமேடை இல்லாமல் உள்ளது. எரிமேடை இல்லாமல் உள்ள காரணத்தினால் பொதுமக்கள் இறந்தவர்களின் உடல்களை தகனம் செய்வதற்கு மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேலும் இந்த பிரச்சனையை அப்பகுதி மக்கள் நகராட்சிக்கு அடிக்கடி கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். இந்த கோரிக்கால அடிப்படையாக கொண்டு புதியதாக எரிமேடை ஒன்று அமைக்கப்படவேண்டும். எனவே மேற்படி பணியினை வேண்டியுள்ளதால் ரூ.5.00 லட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1164

சங்கரன்கோவில் நகராட்சிபகுதியில் உள்ள அம்பேத்கார் நகர் காமராஜ் நகர் மற்றும் காந்திநகர் திருநெல்வேலி சாலையில் உள்ளபொது மயானங்களில் தண்ணீர் வசதி மின்விளக்கு வசதி இல்லாமலும் மற்றும் மயானங்கள் பராமரிப்பில்லாமலும் உள்ளதால் பொதுமக்கள் இந்த மயானங்களை பயன்படுத்துவதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. மேலும் கொரோனா பாதிப்பு உள்ளதால் மயானங்களின் பயன்பாடு தேவை என கருதப்படும் சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட மயானங்களை பராமரிப்பு செய்வதற்கும் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்வதற்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை மேற்கொள்ள ரூ7.45 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொருளில் கண்ட பணியினை மேற்கொள்ள பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1165

சங்கரன்கோவில் நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிகளான ஆழ்துளைகுழாய்கிணறுகள் மற்றும் குடிநீர் விநியோக வால்வுகள் இயக்குவதற்க்கும், மெயின் குழாய், பகிர்மானகுழாய்கள், மற்றும் அடிபம்புகள், சிறுமின்பம்புகளில் ஏற்படும் பழுதுகள் , ஆகியபணிகளை மேற்கொள்ள போதுமான ஆட்கள் இல்லை. மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்க்கு மதீப்பீட்டு ரூ.7.00 இலட்சத்திற்க்கு தயாரிக்கப்பட்டு, இந்நகர்மன்ற தீர்மான எண் 1010/ 30.10.2020 (01.10.2020 முதல் 31.03.2021 வரை) அனுமதி வழங்கப்பட்டு அதன்டிப்படையில் மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள 01.10.2020ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் ஒப்பந்ததாரர் திரு.பி.சிவா என்பவா் மதிப்பீட்டு விலை வழங்கியதன் பேரில் மன்றத்தின் அனுமதி பெற்று 05.10.2020 வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணிகளை மேற்கொள்ள ஏப்ரல் மற்றும் மே 2021 மாதத்திற்கான கூடுதல் தொகை ரூ.2,50,000-ம் தேவைப்படுகிறது. திருத்திய மதிப்பீடு ரூ.9,50,000- மன்ற அனுமதிக்காக. ந.க.எண்:2927/2020/இ2

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1166

சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட திருவேங்கடம் சாலையில் வடபுறமாக செல்லும் குறுக்கு தெருவில் உள்ள பொதுமக்கள் தங்கள் பகுதியில் 30 எண்ணம் குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் குழாய் இணைப்புக்கு பகிர்மானகுழாய் பதிப்பதற்கு மனுதாரா்கள் தங்களது சொந்த செலவில் அமைப்பதற்கு கோரிக்கைவிடுத்துள்ளனர். இதனடிப்படையில் மேற்கண்ட பணியை விதிமுறைகளுக்குட்பட்டு பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்: 0663/2021/இ2

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1167

சங்கரன்கோவில் நகராட்சியில் மூன்று கூட்டுகுடிநீர் திட்டங்கள் மானூர் தாமிரபரணி, மற்றும் கோட்டைமலையாறு ஆகியவற்றில் இருந்து குடிநீர் பெறப்பட்டு மூன்று மேல்நிலை தொட்டிகள் ராஜபாளையம் ரோடு, பேருந்துநிலையம், கழுகுமலைசாலை, ஆகியவற்றில் இருந்து செல்லும் பிரதான குழாய்,மற்றும் பகிர்மான குழாய் மூலம் சங்கரன்கோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு நல்ல முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஆழ்துளைகிணறு மற்றும் குடிநீர் குழாய் விநியோக பகிர்மான

குழாய்களால் ஏற்படும் பழுதுகள் உடனுக்குடன் சரி செய்துசீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இந்நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்ய மேல்நிலை தொட்டிகளில் போதுமான காவலர்கள், வால்வு ஆப்பரேட்டர்கள் நிரந்தர பணியாளர்கள் இல்லை. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் பகிர்மான குழாய்கள் ஏற்படும் பழுதுகளை நீக்கவும், ஆழ்துளைகுழாய்கிணறுகள் பழுது நீக்கவும், குடிநீர் பகிர்மானம் வால்வுகளை இயக்குவும் குடிநீர்விநியோகம் சீரான முறையில் செய்வதற்கு ஆறு மாதங்களுக்கு (மே 2021 முதல் அக்டோபர் 2021 வரை) குடிநீர் பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ-7,00,000/- மன்றத்தின் அனுமதிக்காக. ந.க.எண்: 1042/2021/இ2

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1168

சங்கரன்கோவில் நகராட்சி பகுதியில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கவும் தேவையான பொருட்கள் அட்டவணையின் படி கீழ்கண்ட பொருட்கள் விநியோகம் செய்வதற்கு. 31.05.2021 ந் தேதியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | விநியோகம் செய்ய வேண்டிய பொருள்கள் | எண்ணம்/லிட்டர் | ARCTIC 4-A.Intuc Nagar Rajapalayam | AVM SERVICE POINT 22/1,AMBEDKAR NAGAR Sankarankovil |
|---|---|---|---|---|
| 1. | லைசால் (Lysol) | 1 லிட்டர் | ரூ.80 + 18 % GST | ரூ.120 + 18 % GST |
| 2. | சானிடைசர் | 1 எண்ணம் | ரூ.420 + 12 % GST | ரூ.480 + 12 % GST |
| 3. | பிளீச்சிங்பவுடர் | 1 K G | ரூ.37 + 18 % GST | ரூ.40 + 18 % GST |
| 4. | சுண்ணாம்புத்தூள் | 1 K G | ரூ.9.50 + 5 % GST | ரூ.11 + 5 % GST |
| 5. | 3 layer one use Mask | 1 எண்ணம் | ரூ.4.50 + 12 % GST | ரூ.9 + 12 % GST |
| 6. | N95 Mask | 1 எண்ணம் | ரூ.22 + 12 % GST | ரூ.50 + 12 % GST |
| 7. | கையுறை one use | 1 எண்ணம் | ரூ.5.50 + 12 % GST | ரூ.8 + 12 % GST |
| 8. | PPE Kit | 1 எண்ணம் | ரூ.270 + 12 % GST | ரூ.400 + 12 % GST |
| 9. | முகவுறை (துணியிலானது) | 1 எண்ணம் | ரூ.15 + 5 % GST | ரூ.25 + 5 % GST |
| 10. | முகவுறை (Face shield) | 1 எண்ணம் | ரூ.20 + 12 % GST | ரூ.70 +12 % GST |
| 11. | காட்டன் கையுறை | 1 எண்ணம் | ரூ.180 + 18 % GST | ரூ.250 +18 % GST |
| 12. | Liquid Soap Solution | 1 லிட்டர் | ரூ.430 + 12 % GST | ரூ.650 +12 % GST |
| 13. | Sodium Hypochlorite solution | 1 லிட்டர் | ரூ.18 + 18 % GST | ரூ.25 +18 % GST |
| 14. | Pulse Oximeter | 1 எண்ணம் | ரூ. 1500 + 12 % GST | ரூ. 1800 +12 % GST |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ARCTIC 4-A.Intuc Nagar , Rajapalayam நிறுவனம் மதிப்பீடு குறைவாக கொடுத்துள்ளார். எனவே மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றத்தின் அனுமதிக்காக. (கோப்பு எண்–566/2020/எச்1)

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது**

பொருள் எண் – 1169

சங்கரன்கோவில் நகராட்சி முதல்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் அனுமதிக்கபட்டுள்ள தூய்மை பணியாளர் பணியிடங்கள் 137 தற்போது 86பணியிடங்களில் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நகராட்சியில் தூய்மை பணியாளர்கள் 51 பணியிடங்கள் காலியாக உள்ளது. இந்நகராட்சியின் மக்கள்தொகை 61500 (2017ன்படி) மொத்த வார்டுகள் 30, நகராட்சியின் பரப்பளவு 12.37 சதுரகி.மீ தெருக்களின் எண்ணிக்கை 247 என்பதாகும். மொத்த வீடுகளின் எண்ணிக்கை 20217, மொத்த வணிக நிறுவனங்கள் 2175, மொத்த குப்பை அளவு ஒரு நாளைக்கு 22 டன் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது உள்ள நிலையில் பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்பவும், பெருகி வரும் மக்கள்தொகை மற்றும் தினசரி மக்கள் உருவாக்கும் குப்பை அளவுகளுக்கு ஏற்ப தற்போதுள்ள 86 நகராட்சி தூய்மை பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணியினை முழுவதும் செய்வது சிரமமானதாக உள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் அனுமதி பெற்று ,கீழ்க்கண்ட விபரப்படி தனியார் மூலம் பணி செய்யப்பட்டு வருகிறது.

**1)** நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண்.30543/P3/2017 நாள். 29.12.2018 கடித அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு **10** வார்டுகளில் **(8,9,12,13,14,15,25,26,10**பகுதி, **17**பகுதி, **24**பகுதி**) 75** ஒப்பந்த பணியாளர்கள் தனியார் மூலம் நியமனம் செய்யப்பட்டு இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி **01.10.2020** முதல் நாளது தேதிவரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2)** மேலும் கூடுதலாக நகராட்சி நிர்வாக ஆணையர் கடித ந.க.எண்.28369/J3/2018 நாள்.04.12.2018 கடித அனுமதியின்படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு **31** ஒப்பந்த பணியாளர்கள் தனியார் மூலம் நியமனம் செய்யப்பட்டு இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி **01.02.2019** முதல் நாளது தேதிவரை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3)** மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.36909-9/P3/2015 நாள்.18.12.2015 கடித அனுமதியின் படி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு **10** வார்டுகளில் (1,2,3,11,22,27,28,29,30,10(பகுதி),24((பகுதி) ஒப்பந்த பணியாளர்கள் **74** பேர் தனியார் மூலம் நியமனம் செய்யப்பட்டு இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி **01.05.2018** முதல் நாளது தேதிவரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியானது வருகின்ற ஜுன் **2021** மாதத்துடன் மூன்று ஆண்டுகள் முடிவடைகிறது.

வ.எண் **3**ல் கண்ட ஒப்பந்த பணி காலம் முடிவடைவதால் இந்நகராட்சிக்கு அரசாணை எண். **101** ன்படி தேவைப்படும் பணியிடங்கள் மொத்தம் **283** துப்புரவு பணியிடங்களில். நகராட்சி துப்புரவு பணியாளர்கள் **91** பேர் மற்றும் தனியார் பணியாளர்கள் **106** பேர்கள் என மொத்தம் **192** இடங்கள் போக மீதம் தேவைப்படும் **91** துப்புரவு பணியாளர்கள் பணியிடத்திற்கு நகராட்சி நிர்வாக அலுவலக முதன்மை அனுமதி பெற்ற பின் தனியார் மூலம் ஒப்பந்தபுள்ளி பெற்று தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி செய்யவும், அதற்காகும் அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

பொருள் எண் – 1170

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள இரண்டு Dumber Placer வாகனங்களை ஒன்று குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றொன்றை FSTP பணி நடைபெற்று வருவதால் செப்டிக் டேங்க் கிளீன் செய்யும் வகையிலும் இந்நகர்மன்ற தீர்மான எண்: 903 நாள் 28.2.2020ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதில் ஒரு வாகனம் குடிநீர் விநியோகம் மாற்றம் செய்து வரப்பெற்றுள்ளது. மற்றொரு வாகனம் செப்டிக் டேங்க் கிளீன் செய்யும் வாகனம் கோட்டகுளம் ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணி மேற்கொள்ளும் போது கூடுதல் செலவாகும் எனத் தெரிவித்துள்ளார்.எனவே மேற்படி உத்தேச செலவினம் ரூ.49828/-க்கு மன்ற அனுமதிக்காக.

1. கிளச் கவர் அசெம்பிளிமாற்றம் - ரூ 15568/-
2. வில் பேரிங் மாற்றம் செய்யும் பணி - ரூ 7380/-
3. 4 வீல் பிரேக் லைனர் மாற்றம் - ரூ 8500/-
4. டீசல் பம்புபிரேக் கேபில் - ரூ 14380/-
5. எலக்ட்ரிக் செல்ப் மோட்டார் சர்வீஸ்- ரூ 4000/-

அலுவலகக்குறிப்பு :

பொருளில் கண்டபணியினைசெய்ய பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

தனி அதிகாரி மற்றும்
ஆணையாளர்,
சங்கரன்கோவில் நகராட்சி.

நாள் – **31.05.2021.**